DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.187/2018

Prosecution side witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ரஞ்சித் குமார் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2025.**

A2, A4 are present. A3 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தூத்துக்குடி தாளமுத்துநகர் சிலுவைபட்டி அஞ்சல் தாய்நகர் 1வது தெருவில் குடியிருந்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர் ராஜா எனது மனைவியின் மைத்துனர் ஆவார். நான் பெயிண்ட் அடிக்கும் தொழில் செய்து வருகிறேன். அவரும் என்னுடன் சேர்ந்து பெயிண்ட் அடிக்கும் தொழில்தான் செய்து வந்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியவில்லை. சங்கர் ராஜாவிற்கும் எதிரிகளுக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டால் கஞ்சா பிரச்சனை சம்மந்தமாக ஊரில் பிரச்சனை நடந்துள்ளது. எதிரி முனியசாமி என்ற நண்டாலை தெரியாது. 2017 ஆம் வருடம் ஜனவரி மாதம் 1ம் தேதி நான் எனது ஊரில் நின்றிருந்தேன். அப்போது ஜோசப் மகன் ஜேசு என்பவர் என்னிடம் வந்து பாத்திமா வீட்டின் முன்பு வைத்து சங்கர்ராஜா அடித்துக்கொண்டிருப்பதாக சொன்னார். நாங்கள் சென்று பார்த்தோம். அப்போது அங்கே சங்கர்ராஜாவை அடித்துக்கொண்டிருந்தார்கள் அதில் பாத்திமா, பாத்திமா மகன் மாரிமுத்து, ஜெமினி, நண்டால், ராஜா ஆகிய 5 பேர்கள் மரப்பலகையை வைத்து அடித்துகொண்டிருந்தார்கள். நாங்கள் தடுக்க முயற்சித்தோம், படுக்க நெருங்காதீர்கள் என்று சொன்னார்கள். அதன்பிறகு 5 பேரும் ஓடிவிட்டார்கள். சங்கர் ராஜாவிற்கு மூக்கிலும், காதிலும் இரத்தம் வந்து கொண்டிருந்தது, தலையிலும் காயம் இருந்தது. அதன்பிறகு காயம்பட்ட சங்கர்ராஜாவை எங்கள் ஏரியாவை சேர்ந்த கணேசன் என்பவரின் மகன் மகேஷ் என்பவரின் காரை வரவழைத்து அரசுமருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம். அங்கு சிகிச்சையில் இருக்கும்போது தாளமுத்துநகர் காவல்நிலையத்திலிருந்து போலீசார் வந்தார்கள். அவர்களிடம் நான் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். அதில் சாட்சி கையெழுத்தாக சங்கர்ராஜாவின் அப்பா கார்த்திக்ராஜா கையொப்பம் செய்தார். அந்த புகார் வாக்குமூலம் நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படுவது அது **அ.சா.ஆ– 1** ஆகும். இதேபோல் இந்த வழக்கு சம்மந்தமாக சாட்சியமளிக்க முதலில் அழைப்பாணை வந்தது,

அந்த அழைப்பாணை என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–2** ஆகும். அதன்பேரில் நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க சென்றேன். நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1ல் நீதிபதி முன்பு நான் அளித்த வாக்குமூலம் என்னிடம் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ–3** ஆகும். சங்கர்ராஜாவை சிசிக்சைக்கு சேர்க்கும்பொழுது மருத்துவரிடம் பாத்திமா, மாரிமுத்து அடித்ததாக சொன்னேன், பின்னர் ஆய்வாளர் விசாரிக்கும்போது 5 பேர்கள் அடித்ததாக சொன்னேன். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் மரப்பலகை துண்டுகளால்தான் சங்கர்ராஜாவை அடிக்க பயன்படுத்தியதாகும் அது **அ.சா.பொ.1** (சொத்துபட்டியல் வரிசை எண். 3ல் உள்ளது)ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>குறுக்குவிசாரணை (2, 4ம் எதிரிகள்தரப்பில்)</u>

தாய் நகருக்கும், கலைஞர் நகருக்கும் போய் வர எவ்வளவு நேரம் ஆகும் என்றால் 5 நிமிடம் ஆகும். என் மீதும், இறந்துபோன நபர் மீதும், ஜேசு மீதும் தென்பாக காவல்நிலையம், வடபாக காவல்நிலையம், தாளமுத்துநகர் காவல்நிலையம் ஆகியவற்றில் வழக்குகள் உள்ளது என்றால் இல்லை. 3 காவல்நிலையங்களிலுமே வழிப்பறி வழக்கு, அடிதடி வழக்கு, கஞ்சா வழக்கு ஆகிய வழக்குகள் எங்கள் மூன்று பேரின் மீதும் உள்ளது என்றால் இல்லை. நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10ஆம் வகுப்பு படித்துள்ளேன். தமிழ் எழுத படிக்க நன்கு தெரியும் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்மனுவை நான் எழுதவில்லை என்றால் சரிதான். புகார்மனுவை போலீசார் எழுதி என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நான் புகார்மனுவை படித்து பார்க்கவில்லை, கையெழுத்து போட சொன்னதும் கையெழுத்து போட்டேன் என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது எல்லோரும் சேர்ந்துதான் பலகையால் அடித்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எல்லார் கையிலும் பலகை இருந்ததா என்றால் இல்லை. பலகை மூன்றுமே வேறு வேறு பலகை என்றால் சரிதான். சம்பவத்தை நான் பார்த்ததாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. பலகை 3 துண்டுகளாக போனதாக சொல்வது உண்மையில்லை என்றால் சரியல்ல. பலகைகள் எல்லாம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டதால்தான் மூன்றுமே வேறு வேறு பலகையாக இருக்கிறது என்றுசொன்னால் சரியல்ல. என்னை இந்த வழக்கு சம்மந்தமாக எத்தனை முறை விசாரித்தார் என்றால் 2 தடவை விசாரித்தார். எந்த தேதியில் விசாரித்தார் என்றால் மருத்துவமனையில் வைத்து ஒரு தடவையும், காவல்நிலையத்தில் வைத்து ஒரு தடவையும் விசாரித்தார். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் சாட்சியமளித்தது சம்பவம் நடந்து 7 மாதங்கள் கழித்துதான் என்றால் சரிதான். 7 மாதம் கழித்ததால் எனக்கு போலீசார்தான் என்ன என்ன சொல்ல வேண்டும் என்று சொல்லிக்கொடுத்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு செல்லும்போது யாரெல்லாம் சென்றோம் என்றால் நான், குமார், ராஜேஷ், அருண்குமார் ஆகியோர்கள் சென்றோம். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய

நாளன்று வருடப்பிறப்பு என்பதால் நான் எனது நண்பர்கள் எல்லோரும் மது அருந்தியிருந்தேன் என்றால் சரிதான். அன்றையதினம் நாங்கள் எல்லோருமே மது அருந்தி அங்கு சென்று பிரச்சனை செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. இறந்துபோன நபருக்கு நிறைய விரோதிகள் இருப்பதனால் அடையாளம் தெரியாத நபர்கள் அவரை தாக்கியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. அன்றையதினம் மதியம் 1.00 மணிக்கெல்லாம் அவர் அடிபட்டதாக எங்களுக்கு தகவல் வந்தது என்றால் சரிதான். சம்பவத்தை யாருமே பார்க்கவில்லை என்றாலும், உண்மையான குற்றவாளிகளை கண்டுபிடிக்க முடியவில்லை என்பதனால் எதிரிகளை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்து இந்த வழக்கில் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (3 ம் எதிரிதரப்பில்)

குறுக்குவிசாரணை இல்லை என கூறியதன்அடிப்படையில் குறுக்குவிசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

மறுவிசாரணை இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.
Case No. S.C.No.187/2018
Prosecution side witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. கார்த்தியராஜ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2025.**
A2, A4 are present. A3 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தூத்துக்குடி, தாளமுத்துநகர், சிலுவைபட்டி அஞ்சல், தாய்நகர் 2 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டும் தொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜா எனது மகன். அ.சா.1 ரஞ்சித் குமார் எனது மைத்துனர் ஆவார். சங்கர்ராஜா கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் சங்கர்ராஜா 4 பேர் சேர்ந்து அடித்துவிட்டதாக எனக்குபோன் வந்தது. நான் தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு சென்றேன். எனது மகனுக்கு தலையில் அடிபட்டிருந்தது, வாய் வழியாக இரத்தம் வந்து கொண்டிருந்தது. பேசமுடியாத நிலையில் இருந்தார். எனது மகனை தெருவில் உள்ள பையன்கள் கொண்டு சேர்த்ததாக சொன்னார்கள். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. நான் பார்த்ததே இல்லை. எதிரிகளுக்கும், எனது மகனுக்கும் பிரச்சனை இருந்ததா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக ரஞ்சித் குமார் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்து கொடுத்தேன். அ.சா.ஆ–1 ஆன புகார்வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையதுதான் அது **அ.சா.ஆ–4** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இந்த வழக்கு சம்மந்தமாக யார் அடித்து கொலை செய்தார்கள் என்ற விவரத்தை நான் கேள்விப்படவில்லை, 6 நாட்கள் கழித்து எனது மகன் இறந்துபோனான். 01.01.2017 அன்று எனது மகனுக்கு காயம் ஏற்பட்டது, அதிலிருந்து 6 நாட்கள் கழித்து என் மகன் இறந்துவிட்டான்.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள விபரங்களில் சிலவற்றிற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பகுதியாக பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலீசார் விசாரணையின்போது, கடந்த 01.01.2017 அன்று என் மகனுக்கும், ஆஜர்எதிரிகளுக்கும் கஞ்சா விற்பனைசெய்தது பிரச்சனை இருந்து வந்தது என்றும், அந்த முன்விரோதம் காரணமாக எனது மகன் சங்கர் ராஜாவை பாத்திமா வீட்டின் முன்பு வைத்து அவரது மகன் மாரிமுத்து, அவர்களை சேர்ந்தவர்களான ஜெமினி, நண்டால், ராஜா ஆகியோர்கள் என் மகனை சுற்றி வளைத்து எங்களையே போலீசில் காட்டிக்கொடுப்பாயா, எங்களை காட்டிக்கொடுத்த நீ உயிரோடு இருக்க கூடாது என்று மாரிமுத்து சொல்லி பலகட்டைகளால் என் மகனின் பின்தலையில் ஓங்கி அடித்தும், என் மகன் கீழே விழவும், மற்றவர்கள் கையாலும், காலாலும் அவனை அடித்து மிதித்துள்ளார்கள் என்றும், ஆஜர் எதிரியான ஜெமினி என்பவர் கத்தியை காட்டி கிட்டே வந்தால் உங்களையும் கொலை செய்து விடுவேன் என்று மிரட்டினார் என்றும், மேற்படி விஷயத்தை நான் கேள்விப்பட்டேன் என்றும் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் பேசிக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (2, 4 எதிரிகள்தரப்பில் )</u>

போலீசார் என்னிடம் எழுதாத வெள்ளைபேப்பரில் கையெழுத்து பெற்றுக்கொண்டு பின்னர் நிரப்பிக்கொண்டனர் என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.187/2018

Prosecution side witness for P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. குமார் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2025.**

A2, A4 are present. A3 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

முதல்விசாரணை:–

நான் தூத்துக்குடி, தாளமுத்துநகர், சிலுவைபட்டி அஞ்சல், தாய்நகர் 1 வது தெருவில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்ட் அடிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.1 ரஞ்சித் குமாரை தெரியாது. இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜாவை தெரியும். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. எதிரிகள் நண்டால் என்பவரை தெரியாது. எங்கள் ஊரில் குடியிருக்கும் பாத்திமா, மாரிமுத்துவை தெரியாது. சங்கர் ராஜா கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்று கேட்டால் சங்கர்ராஜாவை அடிபட்டு கணேசன் என்பவரின் மகன் மகேஷ்குமார் ஸ்மோவில் ஏற்றும்போது நானும் ஏறி தூத்துக்குடி அரசுமருத்துவமனைக்கு சென்றோம். என்னுடன் சுமார் 4 பேர்கள் வந்திருப்பார்கள். அவர் யார் என்று தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். இதே வழக்கு சம்மந்தமாக நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அழைப்பாணை எனக்கு வந்தது. அந்த அழைப்பாணை நீதிமன்றத்தில் காட்டப்படுவது அது **அ.சா.ஆ– 5** ஆகும். நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நீதிபதி முன்பாக நான் ஒரு வாக்குமூலம் கொடுத்தேன். அந்த வாக்குமூலம் என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படுவது **அ.சா.ஆ– 6** ஆகும். இந்த வழக்கு சம்மந்தமாக வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. போலீசார் விசாரிக்கும்போது எதிரிகள் சங்கர்ராஜாவை அடித்து காயப்படுத்தியதால் அவர் கீழே விழுந்துவிட்டதை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையின்போது, கடந்த 01.01.2017 ஆம் தேதி மாரிமுத்து கஞ்சா வியாபாரம் செய்தது சம்மந்தமாக சங்கர்ராஜா மற்றும் தெருவில் உள்ளவர்கள் சேர்ந்து போலீசிற்கு தகவல் சொல்லி மாரிமுத்து ஜெயிலுக்கு போய்விட்டு வெளியே வந்தான் என்றும், ஜெயிலுக்கு போவதற்கு சங்கர்ராஜா குடும்பம்தான் காரணம் என்றும், அதனால் 01.01.2017 அன்று சுமார் மாலை 4.00 மணியளவில் நானும், ரஞ்சித்குமார் மற்றும் நண்பர்கள் எங்கள் தெருவில் பேசிக்கொண்டிருந்தபோது எங்களுக்கு தெரிந்த ஜோசப் மகன் ஜேசு என்பவர் எங்களிடம் வேகமாக வந்து ரஞ்சித்குமாரின் உறவினரான சங்கர்ராஜாவை பாத்திமா வீட்டின் முன்பு வைத்து பாத்திமா, அவரது மகன் மாரிமுத்து அவனுடன் சேர்ந்து பிரச்சனை செய்கிறார்கள் என்று சொன்னான் என்றும், உடனே நாங்கள் அங்கு சென்று பார்க்கும்போது மாரிமுத்து கையில் பலகை கட்டையுடன் அவனுடன் இருந்த 2ம் எதிரி ஜெமினி, 3ம் எதிரி நண்டால் மற்றும் 4ம் எதிரி ராஜா ஆகியோர்கள் சுற்றி நின்றுக்கொண்டு சங்கர்ராஜாவை பார்த்து மாரிமுத்து எங்களை போலீசில் காட்டிக்கொடுத்த நீ உயிரோடு இருக்ககூடாது என்று பலகை கட்டையால் சங்கர்ராஜாவின் தலையின் பின்புறம் இதோடு சாவுல கூதிமவனே என்று சொல்லி ஓங்கி அடித்தார் என்றும், சங்கர்ராஜா கீழே விழவும் மற்றவர்கள் கையாலும், காலாலும் அடித்தார்கள் என்றும், அடித்து ஏறி மிதித்தார்கள் என்றும், நாங்கள் கூட்டமாக சென்று சத்தம் போடவும், எதிரி ஜெமினி என்பவர் கத்தியை காட்டி கிட்டே வந்தால் கொலை செய்வதாக மிரட்டினார் என்றும், நாங்கள் எல்லோரும் சத்தம்போட்டு கூச்சல் இடவும் அவர்கள் ஓடிவிட்டார்கள் எனவும், மாரிமுத்து கட்டையை கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றும், சங்கர்ராஜா அந்த இடத்தில் வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் இரத்தம் வந்து பேச்சி மூச்சி இல்லாமல் கிடந்தார்என்றும், அவரது தலையின் பின்பக்கம் வீக்கமாக இருந்தது என்றும், உடனே நாங்கள் கணேசன் என்பவரின் மகன் மகேஷ் என்பவரின் காரில் ஏற்றி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் அவர் சுயநினைவு வராமலேயே 06.01.2017 அன்று காலை 6.00 மணிக்கு இறந்துவிட்டதாகசொன்னார்கள் என்றும், இதனை நேரில் பார்த்த நாங்கள் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் பேசிக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

குறுக்குவிசாரணை (2, 4 எதிரிகள்தரப்பில் )

நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் கொடுத்த வாக்குமூலம் போலீசார் சொல்லிக்கொடுத்தப்படிதான் நான் சொன்னேன் என்றால் சரிதான். அந்த வாக்குமூலத்தில் கூறியுள்ளது உண்மையில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDITIONAL DISTRICT JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.187/2018

Prosecution side witness for P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. ராஜேஷ் | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2025.**

A2, A4 are present. A3 is absent, U/s. 317 Cr.P.C. petition filed and allowed.

<u>முதல்விசாரணை:–</u>

நான் தூத்துக்குடி, தாளமுத்துநகர், கோயில்பிள்ளைவிளையில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்ட் அடிக்கும் தொழில் செய்து வருகிறேன். அ.சா.3 குமாரை தெரியும். நாங்கள் இருவரும் ஒன்றாக வேலை பார்க்கிறோம். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன சங்கர்ராஜாவை தெரியாது. அ.சா.1 ரஞ்சித் குமாரை தெரியாது. சங்கர்ராஜின் அப்பா கார்த்தியராஜாவை தெரியாது. அ.சா.3 குமார் தாய் நகரில் குடியிருந்து வருகிறார். ஆஜர் எதிரிகளைத் தெரியாது. எதிரி நண்டால் என்ற முனிஸ்வரனை தெரியாது. சங்கர்ராஜா கொலை வழக்கு சம்மந்தமாக எனக்கு என்ன தெரியும் என்றால் எனக்கு எதுவும் தெரியாது. நான் நேரில் எதுவும் பார்க்கவில்லை. கொலை வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள். அரசு மருத்துவமனையில் வைத்து கேட்டார்கள். ராஜா அண்ணன் அடிபட்டு அரசுமருத்துவமனையில் கிடப்பதாக கேள்விப்பட்டு போனேன். இறந்துபோன சங்கர்ராஜாவை எனக்கு தெரியும். அவர் என்னுடன் வேலை பார்க்க வந்துள்ளார். போலீசார் என்னை விசாரித்தார்கள். எதிரிகள் சங்கர்ராஜாவை அடித்து கொலை செய்ததை நான் நேரடியாக பார்க்கவில்லை.

**(இந்நிலையில் சாட்சி வாக்குமூலத்திற்கு மாறுபாடாக சாட்சியமளித்ததால், அரசு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி சாட்சி பிறழ் சாட்சியாக கருதபட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதன்பேரில் அனுமதிக்கப்பட்டது.)**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

போலீசார் விசாரணையின்போது, கடந்த 01.01.2017 ஆம் தேதி மாரிமுத்து கஞ்சா வியாபாரம் செய்தது சம்மந்தமாக சங்கர்ராஜா மற்றும் தெருவில் உள்ளவர்கள் சேர்ந்து போலீசிற்கு தகவல் சொல்லி மாரிமுத்து ஜெயிலுக்கு போய்விட்டு வெளியே வந்தான் என்றும், ஜெயிலுக்கு போவதற்கு சங்கர்ராஜா குடும்பம்தான் காரணம் என்றும், அதனால் 01.01.2017 அன்று சுமார் மாலை 4.00 மணியளவில்

நானும், ரஞ்சித்குமார் மற்றும் நண்பர்கள் எங்கள் தெருவில் பேசிக்கொண்டிருந்தபோது எங்களுக்கு தெரிந்த ஜோசப் மகன் ஜேசு என்பவர் எங்களிடம் வேகமாக வந்து ரஞ்சித்குமாரின் உறவினரான சங்கர்ராஜாவை பாத்திமா வீட்டின் முன்பு வைத்து பாத்திமா, அவரது மகன் மாரிமுத்து அவனுடன் சேர்ந்து பிரச்சனை செய்கிறார்கள் என்று சொன்னான் என்றும், உடனே நாங்கள் அங்கு சென்று பார்க்கும்போது மாரிமுத்து கையில் பலகை கட்டையுடன் அவனுடன் இருந்த 2ம் எதிரி ஜெமினி, 3ம் எதிரி நண்டால் மற்றும் 4ம் எதிரி ராஜா ஆகியோர்கள் சுற்றி நின்றுக்கொண்டு சங்கர்ராஜாவை பார்த்து மாரிமுத்து எங்களை போலீசில் காட்டிக்கொடுத்த நீ உயிரோடு இருக்ககூடாது என்று பலகை கட்டையால் சங்கர்ராஜாவின் தலையின் பின்புறம் இதோடு சாவுல கூதிமவனே என்று சொல்லி ஓங்கி அடித்தார் என்றும், சங்கர்ராஜா கீழே விழவும் மற்றவர்கள் கையாலும், காலாலும் அடித்தார்கள் என்றும், அடித்து ஏறி மிதித்தார்கள் என்றும், நாங்கள் கூட்டமாக சென்று சத்தம் போடவும், எதிரி ஜெமினி என்பவர் கத்தியை காட்டி கிட்டே வந்தால் கொலை செய்வதாக மிரட்டினார் என்றும், நாங்கள் எல்லோரும் சத்தம்போட்டு கூச்சல் இடவும் அவர்கள் ஓடிவிட்டார்கள் எனவும், மாரிமுத்து கட்டையை கீழே போட்டுவிட்டு சென்றுவிட்டார் என்றும், சங்கர்ராஜா அந்த இடத்தில் வாய் வழியாகவும், மூக்கு வழியாகவும் இரத்தம் வந்து பேச்சி மூச்சி இல்லாமல் கிடந்தார்என்றும், அவரது தலையின் பின்பக்கம் வீக்கமாக இருந்தது என்றும், உடனே நாங்கள் கணேசன் என்பவரின் மகன் மகேஷ் என்பவரின் காரில் ஏற்றி தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் அவர் சுயநினைவு வராமலேயே 06.01.2017 அன்று காலை 6.00 மணிக்கு இறந்துவிட்டதாகசொன்னார்கள் என்றும், இதனை நேரில் பார்த்த நாங்கள் போலீஸ் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானம் பேசிக்கொண்டதால் எதிரிகளுக்கு பயந்து உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றுசொன்னால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை (2, 4 எதிரிகள்தரப்பில் இல்லை என சொல்லப்பட்டது.)</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District & Sessions Judge,
Thoothukudi.